181/ பலவகை
வைத்தியம் 17

மருந்துகளும் பயனும்

21 x 17.

printed Book in
kalagam pub.

181

# வைத்திய புஸ்தக அட்டவணை

1 பதார்த்த குண விளக்கம் - I பாகம்
2 பதார்த்த குண விளக்கம் - II பாகம்
3 கன்னுசாமியம்
4 வைத்திய சிந்தாமணி
5 திரிசிரா நகர தீபம்
6 பதார்த்த குண சிந்தாமணி
7 ஆத்ம ரக்ஷா அமிர்தம்
8 வீட்டு வைத்தியர்
9 அகஸ்தியர் நயன விதி 500, Naga Muni Nayana Vithi 200
10 ஆயுள் வேத வைத்தியம்
11 வைத்திய கல்லாடம்
12 அநுபவ வைத்தியம் தேவ ரகசியம்
13 சிரோ வைத்திய பூஷணம்
14 அகஸ்தியர் வைத்திய பூரணம் - 1200
15 அகஸ்தியர் பூரண சூத்திரம் - 219
16 ஹிந்து பால வைத்திய போதினி
17 பால வாகடத் திரட்டு - 1200
18 அகஸ்தியர் வைத்திய பால வாகடம் - 300
19 தன்வந்திரி தைலம் - 500
20 குண வாகடம்
21 உரோமரிஷி நாயனார் வைத்தியம் 500
22 தேவ ரத்ன வைத்திய சிந்தாமணி - 800 - திருவள்ளுவர்
23 அகஸ்தியர் பூரணம் - 400 -

181

24 அகஸ்தியர் செந்தூரம் - 300

25 ~~யூகிமா~~ தேரை முனிவர் வைத்தியம். - 1500

26 யூகிமா முனிவர் வைத்திய சிந்தாமணி - 800

27 18 சித்தர் நாடி சாஸ்திரம்

28 வைத்திய இராஜ சிந்தாமணி I பாகம்

29 போகர் ஜனன சாகரம்

30 கை கண்ட அநுபோக வைத்திய பெருங்குறள்

31 அகஸ்தியர் பரிபாஷை திரட்டு

32 இராஜ வைத்திய போதினி

33 சூடாமணி நிகண்டு

34 போகர் வைத்தியம் 700

35 அகஸ்தியர் வைத்திய காண்டம் (பாண்டு வைப்பு) 600

36 வைத்திய மூல அகராதி

37 வைத்திய கை முறைகள்

38 நாலடியார் மூலமும் உரையும்

39 அகஸ்தியர் கன்ம காண்டம் - 300

40 போகமுனிவர் (சரக்கு வைப்பு) 800

41 புலிப்பாணி வைத்தியம். 500

42 அகஸ்தியர் வைத்திய ரத்ன சுருக்கம்

43 யூநானி தாதுவிர்த்தி போதினி I பாகம்

44 பாக்கெட் டாக்டர் — புருஷர்கள் கடமை — சிற்றின்ப சாகரம்
இல்லற இன்ப இரகசியம்

45 அகஸ்தியர் பின் (என்பது) 80

46 நோயணுகா விதிகள்
47 விஷ வைத்திய சிந்தாமணி (பார்வதி பாணி)
48 யூனானி பால வைத்திய போதினி
49 ஸத் வைத்ய ஜீவனம்
50 சட்டமுனி நாயனார் நிகண்டு 1200
51 யூனானி பதார்த்த குண சிந்தாமணி (யூனானி சார சங்கிரகம்)
52 வைத்திய மூலிகை விரிவகராதி
53 போகர் ஜனன சாகரம் - 557. - போகர் நிகண்டு 1200
54 வைத்திய திரவு கோல்
55 சட்டமுனி நாயனார் நிகண்டு - 1200
56 யூனானி ஸ்திரீ வைத்திய போதினி
57 ஆயுள் வேத போதினி
58 சுகந்த பரிமள சாஸ்திரம்
59 சட்டமுனி நிகண்டு 1200
60 ஹோமியோபதி. (பத்திரிகை)
6B அகஸ்தியர் இரண வைத்தியம்
61 சமையல்காரனுக்கு சொல்லத் தகுவது
62 பாக்கெட் வைத்தியம்
63 அகஸ்தியர் இரண வைத்தியம்
64 அநுபோக இரண வைத்திய சிந்தாமணி
65 அகஸ்தியர் பஞ்ச காவிய நிகண்டு
66 அகஸ்தியர் பரிபூரணம் - 400
67 திருமூலர் கருக்கிடை வைத்தியம். 600. (கிழிந்தது)

68 வலிமையும் வனப்பும்

69 சுகாதார போதினி
70 இல்லற வைத்திய அரசன்
71 பதினோராவது நிகண்டு — அகஸ்தியர் வைத்திய ரத்தின
சுருக்கம் — 300 — கருவூரார் பலதிரட்டு — 300 —, அகஸ்தியர்
பஞ்சகாவிய நிகண்டு — 800 — தேவரத்ன இந்திராணி — 800 —
திருவள்ளுவர் 800 ரில் சுருக்கம் — 100 —
72 ஆரிய அநுபோக ரஹஸ்ய வைத்திய அரிச்சுவடி
73 இந்திரிய வெற்றி.
74 பதினோராவது நிகண்டு — மூலமும் — உரையும்.
75 சரீர மர்ம சாஸ்திரம்
76 Family Medicine (in English)
77 Biochemic System of Medicine (in English)
78 Physiology for Beginners (in English)
79 Pear's'. Medical Dictionary (English)
80 Nutrition and Releif Work.
81 Control over Birth
82 The Physiology of Sex Life
83 Sexual Science
84 An Elementary Course in Tropical Hygiene. Part II
85 Kaufmann on Disease
86 Varnishes, Lacquers, Printing ink + Sealing Wax (English)
87 Tobacco. (English)

88 How to make and How to Mend. (English)
89 Secret Remedies. (English)
90 Inks. Their Composition and Manufacture (English)
91 Simple Treatments for common ailments (English)
92 Fasting for Health and Cure (English)
93 Soap (English)
94 First Aid to the Injured (English)
95 பதினென் சித்தர் சில்லறைக் கோர்வை
96 மஞ்சரி.
x 97 தேக தத்துவ சாஸ்திரம்.
98 குரு மருந்து வைத்திய சார சங்கிரகம்.
99 ஆரோக்ய பாலன விதி
100 கைவல்யம் அல்லது கிலக்கியானம்
101 ஆரிய மத உபக்கியானம்
102 தமிழ் இலக்கணம். Tamil Grammar (தமிழ் இலக்கிய திரட்டு)
103 மூவேந்தர் குல சரிதை
104 செந்தமிழ் நீதி
105 பால நீதி செய்யுள் திரட்டு
106 கா. கோ. பலபத்திர நாய்க்கர் சரித்திரம்.
107 சன்மார்க்க சமயம் — (நீதி தருமம்)
108 செந்தமிழ்க் கலம்பகம்
109 கடை யெழு வள்ளல்கள் சரித்திரம்
110 குமரேச சதகம்

T.T.K.

111 இரேகை சாஸ்திரம் (சாமுத்திரிகா லக்ஷணம்)
112 அநீதியா — அநுகூலமா.
113 காங்கிரஸ் சரித்திரம் 2 புஸ்தகம்
114 ஆச்சாரியா விநோபாஜியின் பிரார்த்தனை பிரசங்கம்
115 திரு நிறைத்தாய் (கஸ்தூரிபாய் காந்தி சரித்திரம்)
116 (1) மகாத்மா காந்தியின் சரித்திரம் (2) தேச பக்தி வளர்ச்சியி
ல் வாலிபர் கடமை (3) கிராமஸ்வராஜ் + சிவாஜி
(4) Gandhism in Battle Field. Gandhism on Hinduism and Varnashrama (5) Keep off the Doctor
(6) Gandhian Economics (7) Shantiniketan and its Founder (8) Sexual Relations (what you ought to know)
(9) The Reverse Councils Loot and exchange Mystery
(10) Sri Ramakrishna Paramahamsa
(11) The Hindu University and its founders.
117 பாரதி நூல்கள் 3
118 Congress Axis
119 Why Socialism
120 our Task in India
121 Remarriage of Hindu Women on Sastric Basis
122 A History of Great Britain Book II
123 A Narrative of Indian History
124 Speeches and letters on American Affairs. By. E. Burke
125 How to Mesmerise

# வைத்திய நோட்டு புஸ்தகங்கள்

1 சுதேச வைத்தியம் ரெத்தனம் நோட்டு I பாகம்
2 பல திரட்டு வைத்திய நோட்டு
3 ஷ ஷ ஷ
4 ஷ ஷ ஷ
5 ஷ ஷ ஷ
6 ஷ பல பேர்வழிகளிடம் எழுதியது
7 தர்காசலம் பிள்ளை வைத்திய நோட்டு
8 பாலவாகடம் நோட்டு
9 சுதேச வைத்திய ரெத்தனம் II Book
10 அநுபோக வைத்தியம் பிரம ரகசியம் நோட்டு
11 சந்தான சிந்தாமணி (முதல் பாகம்)
12 பாலவாகடம். Maternal Management of health + disease நோட்டு
[illegible], அகஸ்தியர் [illegible] + Maternal Management of heal
13 Management of (Maternal) of health and disease
14 பற்பம், செந்தூரம், சுண்ணம், கட்டு - நோட்டு
15 வீட்டு வைத்தியம்
16 [illegible] (முதல் பாகம்)
17 ஷ ஷ. (2வது பாகம்)
18 Notes on Biochemistry + பலதிரட்டு வைத்திய நோட்டு
19 [illegible] and பலதிரட்டு
20 ஸ்திரீ வைத்தியம்
21 பலதிரட்டு நோட்டு
22 பலதிரட்டு நோட்டு
23 Notes on Biochemistry
24 பலதிரட்டு பற்பம், செந்தூரம் + etc
25 பலதிரட்டு பற்பம், செந்தூரம். + etc

26. மகாநாட்டு கணக்கு

27 பைஷஜ கல்பம் நோட்டு Book No. 1

28 பைஷஜ கல்பம் வியாதியின் விபரம்-சிகிச்சையும்
ஆயுர்வேத ஔஷத முறைகள் Book No. 2

29 சரபேந்திரர் வைத்திய முறைகள் - குன்மரோக
சிகிச்சை — [illegible] வைத்திய போதினி
சரபேந்திர வைத்திய முறைகள் — கர்ப்பிணி—
பாலரோக சிகிச்சை. Book. 3
தேரையர் தைல வர்க்க சுருக்கம்

30 Book No. 4 (1.) யூநானி சிகிச்சா சார சங்கிரகம் 70 பக்
(2) அநுபவ ~~[illegible]~~ வைத்திய முறைகள் பக்கம் 23
(3) ஆயுர்வேத ~~முறைகள்~~ ஔஷத முறைகள் பக்கம் 1-
(4) வைத்திய கலா நிதி பக்கம் 67, [illegible]
(5) சுவடி பக்கம் 61. ஆனந்த விகடன்

31. கடைமருந்துகளும் பயனும்:-

126 The Vicar of Wakefeild (Oliver Goldsmith)
127 On Fermentation
128 Elements of Machine Design
129 Fortune Teller
130 The Mineral Water Makers
131 Introduction to Inorganic Chemistry
132 ஏ.சுயு நிதி கதை. தெருங்கு
133 Plant Life.
134 கிராம பள்ளிக்கூட வாசகம்
135 Industrial Encyclopaedia
136 Book Keeping
137 Meteria Medica Veteriaaria Indica
138 English Text Book 1946
139 Tamil Text Book. 1946
140 இந்து வா.
141 Walton English Synthesis
142 நவீன பிரதம கணிதம் (மூன்றாம் புத்தகம்)
143 தாவர பாடங்கள்
·144 First English Reader
·145 Easy grammar and oral composition
146 New Era English Readers.
·147 Speeches of Bepin Chandra Pal.
148 The Tamil Alphabet. its Mystic Aspect

149 கோபால் தமிழ் வாசக புஸ்தகம் (இரண்டாம் வகுப்பு)
150 Traders Companian or Vyapar Mitra
151 இந்த மருந்து திறவுகள்
152 அதிசய விளக்கம்
153 சூடாமணி நிகண்டு (11வது 12வது நிகண்டு
154 Epistles of ~~Vive~~ Swami Vivekananda
155 பீர்பால் கதைகள் (தொகுப்பு)
156 English Dictionary
157 English Letters Writter
158 English Medicine
159 Socialism
160 தேசியப் பாட்டுகள் (கிராமலிங்கம் பிள்ளை)
161 சிவமோ - அவமோ
162 புதுமுறை கணக்கு
163 Facts about the United States
164 Redskins on the war path
165 Medical catalague
166 திருப்புகழ்
167 தனேசன்
168 தமிழ் பூகோளம் & English grammar
169 நந்தனார் கீர்த்தனை
170 Madras Land Tenures
171 ஸ்ரீ சுப்பிரமணிய பஜனை

## பொருளடக்கம் :—

# கடை மருந்துகளும் பயனும் 

By. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட். 24 East car St. Tirunelveli. 1/140 Broadway. Madras.1. Preface by. டாக்டர்-மருத்துவ சக்கரவர்த்தி, சிதம்பரனார். கழக வெளியீடு 556

## மதிப்புரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" "நோய்க்கு இடம் கொடேல்" என்பன தமிழ் மூதுரைகள், நோய் வருவது நிலம் நீர்களின் குற்றத்தாலும், உணவு-உடுப்பு. உறக்கம் முதலியவைகளின் தவறுதல்களினாலும் என்ப. இவற்றை ஒழுங்கில் பாதுகாத்துக் கொண்டால் நோய் வராது.

நோய் எதிர்பாராத வகையாக வருமாயின், அவற்றை அவ்வப்போதே எளிய முறையில் தக்க மருந்து கொடுத்துத் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்: அதற்கு "கடை-மருந்துகளும் பயனும்" என்னும் இந்நூல் பெருந்துணையாகும். இந்நூல் ஒவ்வொரு சரக்குப் பகுதியும் படிப்பின், அச்சரக்குகளைக் கொண்டு சிறந்த மருத்துவர் போல வேண்டும் துணைபுரியும். இதன் கண் ஆயிரக்கணக்கான நோய்களும் அவற்றின் எளிய மருந்துகளும் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை எளிதாக உணர்ந்து கொள்ள நோய்கள் அகரவரிசையும் மருந்துகள் அகரவரிசையும் பின் சேர்க்கப் பெற்றுள்ளன.

இந்நூலைத் தொகுத்தற்குத் துணையாக இருந்து நான்கள் திருவிதாங்கோடு சதாசிவம் மகாராஜா அவர்களுடைய பண்டிதராகிய ஏ. ஜே. ஜெயசிங் துரை அவர்களால்

20 1860 ஆம் - 63 ஆம் ஆண்டுகளில் வெளிப்படுத்திய "கோடை
மருந்துகளும் அவற்றின் பரிகார பாகங்களும்" என்னும்
புத்தகங்களாகும். அத்துணை மருந்துகள் அவர்களுக்குக் கிடைத்
தான் என்று உறுதியாகக் கூறலாம். இதுவரை கிடைத்திருக்கும் ஆண்டு
களிலும் வெளிவந்துள்ள நூல்களைத் தந்துதவிய, திரு. த. ச
இராசரத்தினம் அவர்களுக்கும், திரு. கேப். சி.வ. கண்ணையா
பிள்ளை அவர்கள் மேலாக ஆதரவளித்து உதவியவர்களுக்கும்
கடமைப்பட்டேன் என்று கூறுகிறேன்.

இந்நூல் 1828 ஆம் ஆண்டில் வெளியிட்ட திரு.
ம. சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும். இந்நூலை மேலும்
சிறந்த முறையில் வெளியிடத் திருத்தங்கள் செய்து அளித்தமைக்கு
அன்புடன் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருந்து
பண்டிதர். திரு. க. வேலாயுதம் அவர்களுக்கும் என்
நன்றி கூறுகிறேன்.

ஏதும் தவறுப் பிழைகள் இருப்பின் பொறுத்தருள வேண்டு
கேட்டுக் கொள்கிறேன்.

**மைசூர் சித்தாந்த நூல் பதிப்புக் கழகத்தார்**

# முன்னுரை

கை மருந்துகளும் - பயனும் - என்னும் இவ்வரிய நூல் ஏறத்தாழ நூற்றாண்டு
ஆண்டுகளுக்கு முன் திருவிதாங்கோடு மன்னர் அவை மருத்துவராய் இருந்த
திரு. எ. ரா. இராசையா துரையவர்களால் யாக்கப் பெற்றது. அவர் தம் ஆங்கிலத்தி
றம் தமிழும் முறையே நூலின் சிறப்பத்தும் வளப்பத்தும் அமைத்து அழிய
வெளிப்படுத்தியுள்ளார்கள். அவர்கள் கோட்டம் சுகியன் பொதுநலத் துறையின்
(சுகாதாரம்) அலுவலாளர்கள் கற்று நாட்டுப் புறங்களில் நல்ல தொண்டாற்றியுள்ள
மக்கள் நோய் நீங்கி நலமுடன் வாழப் பெருந்துணை புரிய வேண்டுமென்பதே.

இந்நூலில் எளிதாகக் கிடைக்கும் கை மருந்துகளும், அவை கொடிய மருந்
களின்றும் உள்ளாகும் மருந்துகளும் எத்தனையாகக் கூறப்பட்டிருக்கின்றன.
அம் மருந்துகளைச் செய்யும் முறைகள், மருந்துகளின் அளவுகள், இம் மருந்துக
டன் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளன.

நோய்கள், நோய்க்குக் காரணங்கள், நோய்களின் பெயர்கள், விரிவாய்
விளக்கப் பெற்றுள்ளன. நோயாளி மருந்துண்ணும் பொழுது கொள்ள வேண்டிய
மருந்துணவாகிய விலக்குணவுகளின் சீர்மைகளும் செப்பப் பெற்றுள்ளன. அவ்வு
இருக்க வேண்டிய - பருக்க வேண்டிய - முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

புண்கள், கட்டிகள் முதலியவற்றிற்கு, வைத்துக் கட்ட வேண்டிய மருந்து
களும் கூறப்பெற்றுள்ளன. இம்மருத்துவம் ஆண் - பெண் இருவர்களும் பொதுவாகக்
கற்றுக்கொள்ள வேண்டும் தன்மையது. சிறப்பாகப் பெண்கள் தங்கட்கு உரிய
தொழில்களையாகக் கற்றுக் கொள்வதால் நல்லியல்பை வைத்திருக்க வாய்ப்புச் செய்வது
இப்புத்தகத்தை மொழிபெயர்ப்பவர்க்கு அக்காலத்தில் திருவிதாங்கூர் அரசியலாரும்
நாட்டு மக்களும் புரிந்து எளிதாகக் கையாளப்பட்டு வந்த மொழி தமிழ் மொழி
என்பது தானே போதும்.

இத்துடன் கிடைக்கப்பட்ட அதே காலத்துச் சென்னை மருத்துவக் கல்லூரித் துணை முதல்வரும், மருத்துவத்துறை அறிஞருமாகிய திரு. ம. சுந்தரராச நாயுடு அவர்கள் எழுதிய "பதார்த்தகுண ரத்னாகரம்" என்னும் அரிய நூலில் பதினாறாவது படலத்தில் (அத்தியாயம்) நாட்டு (சுதேச) மருந்துகள் என்னும் தலைப்பின் கீழ் ஆங்கில மருத்துவ நூல்களில் காணப்படாத பல மருந்துகளின் இன்றியமையாத சில மருந்துகளின் இன்றியமையாமை காணப்படுகின்றன.

இவைகளும் இத்துடன் இணைக்கப் படவேண்டியவையே என்று தோன்றுகையால் இணைப்பாகச் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்த நாட்டின் சில போன்ற எளிய மருந்துகள், அவைகளும் மலிவான விலைக்குப் பெற்றுச் செய்முறைகளும் சுலபங்களே செய்து, உண்டு நோய் நீங்கி நலமுடன் வாழத் துணை செய்வன பலவாம்.

இத்தகைய மருத்துவப் பேராசிரியர்கள் இவர்கட்கெல்லாம் கழகத்தார் நன்றி என்றும் உரித்தாகுக. இவர்கள் வழியைப் பின்பற்றித் தக்கார மருத்துவப் புலவர்களும் காலத்துக்கு வேண்டும் மருத்துவ நூல்கள் ஆக்கி நாட்டுக்குக் கொடுக்கும் பேறு பெற்றுப் புலவர்களாக. அதுவே வழிகாட்டிய இப் பேராசிரியர் அருள் முறையுமாகும்.

மேலும் 'நாடோறும் பயன்படும் வீட்டு மருந்துகளின் சிலவும்' இணைப்பு இவ்விடங்கள் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்நூலின்கண் காணப்படும் மருந்துகளும் செய்முறையும், எளிமையும் சிக்கனமும் பொருந்தியனவாகக் காணப்படுகின்றன. ஆதலால், ஒவ்வொரு வீட்டிலும் இப்புத்தகம் இருக்க வேண்டுவது இன்றியமையாததாகும். இப்புத்தகம் இங்ஙன மருத்துவர் போலிருந்து ஒவ்வொரு குடும்பத்திலும் உண்டாகும் நோய்களை வரவொட்டாது. அவ்வப்போது தொடக்கத்திலேயே நீக்கி நலம் பெறச் செய்யும் என்பது துணிபு.

கைக் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் திடீரென நோய்கள் ஏற்பட்டாலும் கைத்திறமுடன் இருந்து மருந்து கொடுத்து அவ்வப்போது நீக்கி

நீக்கிக்கொள்ளும் அறிவும் ஆற்றலும் நம் முன்னோர்களுக்குக் 
கூடப் பழக்கத்தால் ஏற்பட்டிருந்தன. இப்பொழுது அவை நாம் அறவே
மறந்து விட்டோம். அதனால், உடலிருந்து உள்ள வரைக்கும் வைத்தியத்தை
வருந்தி மருத்துவ நிலையம் நாடிச் செல்லுகின்றோம். இவ்வகைத் துன்பங்க
ளெல்லாம் நேர வொட்டாது செய்யும் உறுதியுடையது இந்நூல்.

மருத்துவ நிலையங்களும், நல்ல மருத்துவர்களும் இல்லாத நாட்டுப்
புறங்கள் பல்லாயிரக்கணக்காக இருக்கின்றன. அங்கு வாழ்கின்றவர்கள்
சிறு நோய் தோன்றினும் பெருகும் அதற்குச் செய்வதறியாது திகைக்கின்றனர்.
வெளியிடங்களுக்குக் கால் கடுக்க ஓடுகின்றனர். அதனால் பெரும் பொருள்
செலவும் காலக்கழிவும் ஆகின்றன. அதுமட்டுமோ! சில இடத்துத் தட்ப
வெப்பமும், நீர் நிலையும் ஒத்துக் கொள்ளாமையாலும், இடவசதி இன்மை
யாலும் பெரியவர்களுக்கு நோயும் வருத்தமும் உண்டாகின்றன. இக்காலங்க
ளில் குடும்ப நிலையும் வறுமையும் அலைக்கழித்து அல்லலுறுகின்றன
இவைகளெல்லாம் நினைப்பினும் நிகழ வொட்டாது செய்து நோய் வாராது
காப்பதும், ஒரு வேளை வந்தாலும் உடனே நீக்கிக் காப்பதுமாகிய பெரு
நோக்கத்துக்குப் பெருந்துணை செய்யும் சிறப்பு வாய்ந்தது இந்நூல்

பெருமக்களும், சிறப்பாக மருத்துமாணவர்களும், பொதுவாக எல்லா
மாணவர்களும் வாங்கிக் கற்றுத் தங்கட்கும், நாட்டிற்கும் பெருநலம்
செய்வார்கள் என்று பெரிதும் நம்புகின்றேன்

மருத்துவன் சக்கரவர்த்தி
பெகாம்பலனார்

சென்னை 1,
1-9-1950.

24

# உடலோம்பல்.

"மாற்றருங் - - - - - - - - - -
இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும். தொல். புறத். 24

"தீங்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ
வாங்கு மருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மை இழுது இழுகி
ஐயவி சிதறி யாம்பல் ஊதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வளைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழீ
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே" - புறம். 281

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின் - திருக்குறள் 217.

* "மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார் உயர்தவம் வளங்கெடப்
பொன்னுங் கொள்ளார் மன்னர் நன்னுதல்
நாந்தம் உண்மையி னுளமே யதனால்
தாஞ்செய் பொருளள வறியார் தாங்கசிந்து
ஒன்றாற் றிரைப்ப நின்னிடை யொழியச்
சென்றோர் மன்றநங் காதல ரென்றும்
இன்னா நிலைமைத் தென்ப
என்னோரும் அறிபவிவ் வுலகத் தானே"

- நற்றிணை 226.

# மருந்து

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
946
கழிபேர் இரையான்கண் நோய்". [illegible]

உயிர்க்கு உறுதியைத் தருவது அளவறிந்து உண்டல். அவ்வுடற்கு உணவு இன்றியமையாதது. அவ்வுணவு இன்பம் பயக்கும் இயல்பினதாயிருத்தல் வேண்டும். அளவின் இழிந்து குறைத்துண்ணும் தூய உணவே நிலையான இன்பம் தரும். அளவின் மிகுந்து கடை உண்பதும் நோய்க்கிடமாகும். அஃது அறிவுடைமையும் ஆகாது. மக்கள் உணவெனவும் சொல்லப் படாது விலங்குகள் என்று சொல்லப்படும்

வாதம் - பித்தம் - சிலேத்துமம் (கபம்) என்னும் மூன்றும் அவ்வவற்றின் நிலையில் நிற்றல் வேண்டும். அவ்வியல்புகள் [illegible] -வான உணவாலும் அளவான உழைப்பாலும் உண்டாகும்.

உண்டது நன்கு செரித்தலையும், மேல் உண்பது செரிக்கத் தக்க அளவும் அறிந்து உண்டால் நோயின்றி நெடுநாள் வாழலாம்

பின் உண்ணப் போகின்றான் முன் உண்டது செரித்ததை அறிந்தால் மட்டும் போதாது; உடலுக்கும், காலத்துக்கும் பொருந்திய இயல்புள்ளவைகளையே உண்ணல் வேண்டும். அதுவும் நன்கு பசித்த பின்பே உண்ணல் வேண்டும்.

தெரிந்த அளவைக் கடந்து மிகைப்படி உண்ணும் போதும் மனம் விரும்பியபடி உண்ணுதல் ஆகாது. நோய் வராத நிலையில் விருப்பத்தை அடக்கி உண்ணுதல் வேண்டும்

எவ்வளவு செரிக்கக் கூடுமோ அவ்வளவே உண்ணல் வேண்டும் அளவுக்குக் குறைவாக உண்டால் நோயும் அளவுக்கு பசி உண்டாகும்

எதிர்பாராத வகையில் நோய் வந்தால் மருத்துவன் துணைகொண்டு அந்நோயைப் போக்கிக் கொள்ளல் வேண்டும். மருத்துவரும் நோய் வந்த காரணத்தையும், அதைப் போக்கும் வழியையும் தெளிய உணர்தல் வேண்டும். மருந்தும், மருந்தினையும் செம்மையாகக் கொள்ளத் துணைசெய்தல் வேண்டும்.

நோயாளியின் நிலைமையும், நோயின் தன்மையும் அப்பொழுதுள்ள கால இயல்பும், மருத்துவ நூல் வழியாக உணர்ந்து ஏற்ற முறையாக மருந்து கொடுத்தல் வேண்டும்.

மருந்தென்பது உட்கொள்ளும் மருந்து ஒன்றுடன் மட்டும் அமைவ தன்று. நோயாளி, மருத்துவன், மருந்து, மருந்து வாய்ப்பாகச் சேர்த்துக் கொடுப்போன் என நான்கு வகையாகும். ஒவ்வொரு வகையும் நந்-நான்காய்ப் பதினாறு பிரியும். இப்பதினாறும் ஒன்று கூடியமைவதே மருந்தாகும். அதுவே உறுதியாக நோய் நீக்கும்.

பிரிவுகள்:— நோயாளிக்குரியன, செல்வம், மருத்துவன் சொற்படி நிற்றல், நோயைச் செவ்வையாக உணர்த்தல், மருந்தால் ஏற்படும் துன்பம் பொறுத்தல். மருத்துவருக்குரியன:— நோய்க்கண்டஞ்சாமை, கல்வியும், துணிவும் உடைமை, பலகாலும் தீர்த்து வருதல், மனமொழி மெய்கள் தூயவாதல். மருந்து:— பல நோய்க்கும் பொருந்துவது, சுவை பயன் மிகு நிறைதல் உறுதியாக இருப்பது. எளிதாகக் கிடைப்பது, நோயாளிக்கு ஏற்றது, சேர்த்துக் கொடுப்போருக்குரியன. நோயாளியிடத்து, அன்பு, மனமொழி மெய்கள் தூயவாதல் சொல்லியபடி செய்தல், அறிவுடைமை

4.100 99 சென்னை மெடிக்கல் காலேஜ் ... [illegible]
100. Blank. டி. ம. சிதம்பரநாத ... [illegible] அவர்கள்

வைத்திய பதார்த்த குண ரத்னாகரம்

என்னும் நூலின் பக்கங்கள் ... [illegible]

குண - மருந்துகளும் அவைகளின் பயன்களும்

<-> <-> <-> -ф- <-> <-> <->

4.101 பக்கம். 101

இணைப்பு 1

Indigenous Drugs (சுதேச மருந்துகள்)

The following is a list of a few native drugs with their properties and uses, which may in many cases be advantageously substituted for more costly European Medicine or may be used with great success in cases of Emergency.

இங்கிலீஷ் வைத்திய நூல்களில் இல்லாத சுதேச மருந்துகள் பல உண்டு. [illegible]

பக்கம் 101

1\. அகத்தி :- (Agati Grandiflora) [illegible]

[illegible]

34
4.101 கள் காணும் போது, அத்திச் சாற்றை [illegible] பூசிக்கொள்
கள் ( [illegible] ) பட்டையை இடித்துச் செய்துக்
கொடுத்தால் [illegible] குணம்.

101
(2) அத்தி :- (Common Fig Tree) (பட்டை - பால் -
பிஞ்சு - வித்து - காய்) [illegible] பட்டையைப்
பெரும்பாடு, ரத்தபேதி, இரத்த மூத்திரம் இவைகளுக்குக்
கொடுத்தால் குணமாகும். [illegible] 1/2 பலம் அரைத்து
[illegible] 1- ஆழாக்கு வீதம் கொடுக்கலாம். [illegible]
பட்டையை [illegible] பழுத்த காயை 1/2 ஆழாக்கு
வீதம் கொடுக்கலாம். அத்திப்பழம் [illegible].
[illegible]
[illegible]
[illegible]
அத்திக்காயில் [illegible] பாதம், [illegible], [illegible]
[illegible], [illegible] ( [illegible] ) இவைகளுக்குக் கொடுக்கலாம்.
101
(3) அத்திவிரையம் :- (வேர்) - (பட்டை) [illegible]
[illegible] * ( [illegible] )
[illegible] ) [illegible] 1/2 [illegible]
4.102
[illegible]. அத்திவேர் [illegible]
[illegible] கொடுக்கலாம்; [illegible].
அக்காசத் தாமரை
[illegible] :- [illegible] (Pistia Stratio-
-tes) ( [illegible] ) - [illegible] ( [illegible] ) [illegible]
[illegible] ( [illegible] ) [illegible]
[illegible] போடலாம். [illegible]
[illegible]. [illegible]

4.102-103 

102 [illegible] (அவாசகாசத்துக்கும்) [illegible]

(5) ~~[illegible]~~ அமுக்கிராக்கிழங்கு:— அசுவகந்தி (Winter Cherry) (கிழங்கு) [illegible]

[illegible]

102 (6) அரத்தை:— (Galangal) (வேர்) [illegible] 2 இனங்கள் [illegible]

[illegible]

102 (7) ஆடாதோடை:— (Malabar Nut)? [illegible]

[illegible]

103 (8) ஆடுதின்னாப்பாளை:— (Worm Killer) (இலை) [illegible]

[illegible]

(9) ஆலமரம்:— (Banyan Tree) (பால்-பட்டை-விதை) சங்கோசகுணம். ஆலம்பால் பல்நோய்க்கும் காலெரிப்புக்கும் தடவலாம். பட்டையத்துடன் கஷாயமாய் சாப்பிட்டுவர மேகநோயும் நீங்கும். பட்டைக் குடிநீர் கிரந்திக்கும். (விதைகளை விழும் ஆலவிழுதுகள் (கொழுந்து) சாப்பிட்டுவர தேகக் கட்டு உண்டாகும்.

(10) ஆவாரை:— (Tanned Cassia) (பூ-விதை) பூவைக் குடிநீராகச் செய்தும் விதையைப் பொடியாக்கியும், நீரிழிவுக்குக் கொடுக்கலாம். ஆவாரைப்பூவுடன் பச்சைப்பயறு (சிறுபயறு) சேர்த்து உடம்புக்குத் தேய்த்துக் குளித்துக் கொண்டு வந்தால் சருமத்து மேகம் நீங்கும்.

11. இந்துப்பு:— சிந்து தேசத்துப்பு (Indus) என்பதிலிருந்து வந்தது (சிந்து தேசத்து உப்பு) (Sindi) (Rock Salt) விரேசன குணம். இதில் ஆவாரை போடி சேர்த்துக் கொடுத்தால் பேதி யாகும். மலச்சிக்கலால் காணும் நோய்கள் நீங்கிவிடும்.

12. இம்புறவேர்:— (சாயவேர்) இருவேர் (Chay Root) (சிவப்புவேர்) சுபஹாரகுணம். நீர்ச்செய்கை, கபநோய், க்ஷய (சுவாசகாசம்) இவைகளுக்குக் கொடுக்கலாம். இலைத் தூளை அரிசியுடன் சேர்த்து அடை சுட்டுக் கொடுத்தாலும் கபநோய்கள் குணமாகும்.

13 இசப்கோல் விதை:— இசப்கோல் விதை (Spogel Seed) வீரியகுணம். 3 பாகங்களை - இசப்கோல் விதை 2 பாகங்களை அதிமதுரம் இவைகளை 2 படி வெந்நீரில் போட்டு 3 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி 2 ஆழாக்கு

4.104 அவைக்கு அடுக்கடி கொடுக்கலாம். நீர் எரிச்சல், வெட்டை - (பிரமேகம்) இதுமேல் இவைகள் தீரும்.

104
14. உத்தாமணி :— வேலிப்பருத்தி (Dalmia Extensa) (இலை) அங்கக்கிரந்தி, காசங்களை, கெட்ட நீர் வைத்து, வலி சுரம், வாய்வுகளை, (கரப்பு), மாந்தம் இவைகளுக்குக் கொடுக்கலாம். அதுடன் சுண்ணாம்பு சேர்த்து வீக்கங்களுக்குப் பூசலாம். தீரும்.

104
15. எள்ளு :— (Sesamum Seed) எள்ளெண்ணெய் - நல்லெண்ணெய், பல காரியங்களுக்குப் பயன்படுகிறது. இளம் எண்ணெய்க்கு A.டல இதைப் பயன்படுத்தலாம். சில முறைகளில் சேர்க்கின்றது. மல்லிகை, சாமந்தி, ரோஜா, முதலிய மணமுள்ள பூவில் எதையாவது 1க்கு 3 பங்கு எண்ணெயில் இடவும். அதைத் தலைக்கே தேய்க்கலாம். நல்லெண்ணெயை நாள் தோறும் சாப்பிட்டுக் கொண்டு வந்தால் தேகம் பூரிக்கும். சொறி சிரங்கு நீங்கும். இதுமேல் தளியும். இதை புண்களுக்குப் பூசலாம்.

104
16. ஓமம் :— (Omum) (விதை). உஷ்ணகாரி, கர்ப்பவாத ஹரகாரி. இதை வயிற்றுவலி, பேதி, வாந்தி, மாந்தம், வயிற்று எரிச்சல், அஜீரணம் இவை முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம். ஓமத்தீநீர் (Omum water) செய்முறை:— 1 வீசை ஓமத்தைச் சல்லைத் துணியில் முடிந்து வாலியில் (செம்பின் (திராவகம்) வடிக்கும் பாண்டம்) தொங்க வைத்து (அடியில் படுத்தால் காந்தி விடும்) 9 புட்டி தண்ணீர் விட்டு 4 புட்டிக்கு வடித்துக் கொள்ளவும். நீரின் மேல் தைலம் மிதக்கும். அதைத் தொட்டியாகாமல் தட்டிக் கொள்ள வேண்டியது

38 4-104-105

இதனுடன் மிகவும் காரமுள்ளது. 1-2 துளி சருக்கரையில் இட்டுக் கொடுக்கலாம். மிகுந்த சூடு பட்டால் இதன் கெட்டுப்போகு வதுமில்லாதது. இதை அரைத்தாவது, குழம்பு செய்தாவது கொடுக்கலாம். இதன் பல மருந்துகளில் சேருகின்றது.

104
17. கஞ்சாங் கோரை :— (White Basil) (சீல) உஷ்ணகாரி கர்ப்பவாதஹரகாரி, சாறும் ஒரு பாலாடை அளவுக்குக் குழந்தைகளுக்குக் கொடுத்தால், இருமல், மாந்தக் கழிச்சல், சுரம், இவைகள் நீங்கும். இலையை உலர்த்தித் தேயிலைக்கு டீ.யாக இங்கிலீஷ்காரர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

105
18. கடலைப் புளிப்பு :— (Vinegar of the Bengal Horsegram) கடலைச் செடிமேல் விழுகிற பனியைச் சல்லாத் துணியைப் போட்டுச் சேகரித்துப் பிழிந்து எடுத்துக் கொள்ளப்படும். இது புளிக்கும் நீரில் இட்டுக் குடிநீராகச் செய்து கொடுத்தால் அஜீரணத்தினாலே மந்தியாலும் நீர்க்குன்றும் தீரும்.

105
19. கடுக்காய்-வரிக்காய், அரிதகி :— (Chebulic Myrobalam or Ink-nut) சங்கோசனகாரி, மலகாரி, கடுக்காயில் பல இனங்கள் இருந்த போதிலும், குணத்தில் மிகுந்த வேறுபாடு இல்லை. காபுலிக் கடுக்காய் சிறந்தது. கடுக்காய், காசுக்கட்டி இவைகளைச் சமனாய் அரைத்து நாக்குப் புண்ணுக்குத் தடவலாம். கடுக்காயை இடித்துத் [illegible] தலைக்கு வார்த்து பாதி நாக்கு மேல் தடவித் [illegible] விட்டு வழக்கம். உப்புப் போடுகிற நீரில் இதைச் சேர்க்கலாம். கடுக்காய், பழரசம் இவைகளைச் சேர்த்து பாவனைக் கடுக்காய் என்று செய்வது ஒரு முறை கடுக்காயைத் துவையல் செய்து சாப்பிட்டால் உணவு வெறுப்பு (அரோசகம்) நீங்கும். மலம் இளகும். குடிநீர் செய்து

39 4-106 கண்ணெரிச்சலுக்கும், அதிமூத்திர நோய்க்கும் கொடுக்கலாம். கடுக்காய் பஞ்சு மேல் ஆமணக்கெண்ணெயைத் தடவி வதக்கித் தூள் செய்து சீதபேதி நோய்க்குக் கொடுக்கலாம். கடுக்காய்ப் பூவுக்கும் (கர்க்கடக சிங்கி) துவர்ப்புகுணம் இருக்கின்றது. கடுக்காயோடு ரோசாப்பூச் சேர்த்தால் மலம் இறுகாது. கடுக்காய்ப் பொடியால் பல் துலக்கினால் ஈறுகளிலிருந்து வடிகிற ரத்தம் நின்று, புண்ணாறி, ஈறு வளர்ந்து நோய் நீங்கிப் பல் இறுகும். கடுக்காயை ஒரு ஆண்டு விடாமல் காலையில் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் நரைமயிர் தோன்றாது என்று சொல்லுகிறது. கடுக்காய்த்தூள் மூலத்தின் மேல் தூவலாம் இதிலிருந்து ரத்தம் வடிகிறதற்கு நேரடி மருந்தாக இடலாம் (இரத்த பிளவைக்குப் பதியமிடலாம்) 6 கடுக்காயை தூள் செய்து 1 விராகனெடை கிராம்பு அல்லது இலவங்கப்பட்டை சேர்த்து 3/4 ஆழாக்கு நீரில் போட்டு 10 நிமிடம் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிட்டால் வயிற்றுக் கடுப்பு வாந்தி இவை இல்லாமல் 3-4-தடவை செவ்வையாய்ப் பேதியாகும். தண்ணீருக்குப் பதில் பாலைச் சேர்த்துக் கொள்ளலாம். சீதபேதிக்கு இதைக் கொடுத்தால் மிகவும் நன்மை செய்யும்.

106
20. கண்டுபாரங்கி:— இது தேக்கு. (வேர்) இத்துடன் சுக்கு கொத்துமல்லி, இவைகளைச் சேர்த்துக் குடிநீர் ஆக்கிக் கொடுத்தால் சுரம் - இருமல் - இவைகளுக்குக் கொடுக்கலாம்

106
21. கருஞ்சீரகம்:— (Nigella Sativa) (விதை) இதை அரைத்து எண்ணெயில் குழப்பிச் சிரங்குக்குப் பூசலாம். 106

22. கருநொச்சி:— (Gandarussa Vulgaris)
இலை சாற்றைக் கடுகுடன் சேர்த்துக் கொடுத்தால் வாந்தியாகும். எண்ணெயோடு சேர்த்து வீக்கங்களுக்குத்

பிள்ளைகளுக்குத் தெளிக்கலாம். இலையைக் குடிநீராக்கி அவர்களுக்குக் கொடுக்கப்படும். இந்த இலையை நீர் போட்டுக் காய்ச்சிச் அதற்றில் உப்பு பார்த்துக் கொள்ளலாம். உப்புச் சேர்த்து வதக்கி இடுப்பு வலிகளுக்கு ஒற்றடம் கொடுக்கலாம்.

23. கருந்துளசி:— (இலை) இருமல் ஜலதோஷம் (சளிப்பு) இவைகளுக்குக் கொடுக்க உதவும்.

106 24. கறிவேப்பிலை:— கறிவேப்பிலை, (Curry leaf) உத்தமகாரி ஜடராக்கினி, வர்த்தனகாரி, மலகாரி, இலையை லேகியமாயாவது குடிநீராகவாவது செய்து பார்த்து இருந்துக் கொடுக்கலாம். ஏற்கெனவே பச்சிலையை மெல்லப்பால் விட்டரைத்துச் சாறு பிழிந்து கசாயம், நெல்லி சேர்த்துக் குழந்தைகளுக்கு வார்த்து இடுக, நாளொன்றுக்கு 2-3 தடவை கொடுக்கலாம். சுரவயல், அஜீரணம், சுரம், பித்தம் வயிற்றுளைச்சல் இவைகளுக்கு உபயோகித்தால் நலக்கும்.

106 25. கருவேல்மரம்:— (Babool Tree) (பிசின் பட்டை) பல்லாரம் பிணிகளுக்குப் பதிலாய் இது பயன்படுகின்றது. பட்டையைக் குடிநீராக்கிக் கொடுத்தால் வயிறு உண்டாகும். வாய்க் கொப்பளித்தால் புண் ஆறும். புண்களைக் கழுவுவதில் இக்கஷாயத்தில் உபயோகம். அவை ப்புக்குப் பதிலாய்ப் பயன் படுத்தலாம். கருவேலம் பட்டை, பனை வெல்லம் இவைகளைச் சேர்த்துக் ~~கொள்ளலாம். இதெல்லாம்~~ காய்ச்சி பட்டைச் சாராயம் (Arrack) இறக்குகிறார்கள்.

107 26. கற்பூரவல்லி:— (Thick-leaved Lavender) (இலை) குழந்தைகள் இலையை வதக்கிச் சாறு பிழிந்து கோரோசனை மாத்திரை சேர்த்துக் குழந்தைகளுக்கு ஜலதோஷத்துக்கும் இருமலுக்கும் கொடுக்கலாம்.

107-108

27. கழற்சி :— கழற்சிக்காய் (Bonducnut) 41
சோபாதோஷகாரி, அக்னிதகாரி, பலகாரி. பருப்பை 10 கிரே
யின் எடை வெளிக்காய்ச்சலுக்குக் கொடுக்கலாம். மிளகு
40 கிரேயின், பெருங்காயம் 20 கிரேயின், கழற்சிப் பருப்பு
100 கிரேயின்ஸ் இவைகளைத் தேன் விட்டு அரைத்து 30 மாத்திரை
கள் செய்து 2 மாத்திரை வீதம் நாளொன்றுக்கு 2-3 முறை
குளிர்காய்ச்சலுக்குக் காய்ச்சல் வராத போது கொடுக்கலாம். விரை
வாதத்துக்கும் பருப்பை அரைத்துப் பற்றுப் போடலாம். அல்லது
இலையைத் தேங்காய்ப்பூ சேர்த்து வதக்கிக் கட்டலாம். வக்சிவ

107 -நீசத் தைலத்தில் கழற்சிப் பருப்புச் சேருகின்றது.

28. கள்ளி :—(Milk hedge) (பால்) கொடிக்கள்ளி, இலைக்
கள்ளி, சதுரக்கள்ளி என முன்னமையாய 4 இனங்களுண்டு
இவைகளின் பாலுக்குப் பேதியாக்கும் குணம் இருக்கிறது. கள்ளிப்
பாலில் புளியைக் கரைத்து பேதிக்குக் கொடுப்பது வழக்கம். இலைக்கு
அதிகப் பேதியாகிற தீக்குணத்தைச் செய்கிறது. மேலே தடவினால்
புண்ணாகும். சில்வாதத்துக்குத் தடவி வேர் மண்ணிப் போகிற
துண்டு. பட்டை, காம்புகளிலிருந்துக் கட்ட உதவும். மற்ற
இனங்கள் தைல முறைகளில் சேருகின்றன. கொடிக்கள்ளி
யையாவது, இலைக்கள்ளியையாவது வதக்கி தாளித்துச்
சிறு குழந்தைகளுக்குப் பேதிக்கு வார்க்கிற வழக்கம் கேட்டது

108

29. கற்றாழை :—(Small Aloe) (மடல்) - இதில் பல
இனங்களுண்டு. கற்றாழைச் சோற்றை எடுத்துப் பால் போக
கழுவிக் கழுவி, அவ்வாறு துணியில் போட்டுப் பழக்கலாம்
வெண்ணெயைத் தாவிக் கண்ணோய்க்கு குளிர்ச்சிக் கொடுக்கலாம்
இதை விக்கங்களுக்கும் கட்டலாம். இதைக் கற்கண்டு

42 108 இந்தக் கற்களைச் சேர்த்துச் சாப்பிட்டால், தேகச் சூடு தணியும்

30. காக்கட்டான் :— (Clitoria Ternatea) (விதை-வேர்)
இதில் வெள்ளை, நீலம் என 2 இனங்களுண்டு. வெள்ளையினம் நல்லது. விதையை நெய்விட்டு இளவறுப்பாய் வறுத்துச் சூர்ணம் செய்து 1 விராகனெடை கொடுத்தால் பேதியாகும். திராட்சை 2பங்கு சேர்த்தும் கொடுக்கலாம். வேரின் சூர்ணத்தில் 2-3 வயதுக் குழந்தைகளுக்கு 1/2 விராகனெடை கொடுத்தால் [illegible]. சில வேளை வாந்தியாகும். கபநோய்க்கு நல்லது.

108 31. காமாட்சிப்புல் :— வாசனைப்புல். கவட்டம்புல் (Lemon-grass) மணமுடைய இந்தப் புல்லைக் குடிநீராக்கிக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் பசி உண்டாகும். வியர்வை பெருக்கும். புல்லை மோர் விட்டரைத்து எச்சிற்றுப் புண்களுக்குப் பூசலாம். தைலத்தை வாதநோய்களுக்குப் பூசலாம்.

108 32 கீழ்வாய்நெல்லி :— கீழாநெல்லி (Phyllanthus Niruri (சமூலம்) பித்தத்தைத் தணிப்பது, (பித்த சமனகாரி) சிறுநீர் பெருக்குவது. (மூத்திர வர்த்தனகாரி) இதை அரைத்து 2பலம் வீதம் ஒரு ஆழாக்குப் பாலில் கலந்து நாளொன்றுக்கு 2 வேளை கொடுத்துக்கொண்டு வர மஞ்சள் காமாலை நீங்கிவிடும். பொடியாகவும் (சூர்ணமாகவும்) குடிநீராகவும் பயன்படுத்துவதுண்டு. துளிர்களை வெந்தயம் சேர்த்துக் குடிநீராக்கி வயிற்றுக் கடுப்புக்குக் கொடுக்கலாம். இலைத்தூளில் 2 சிட்டிகை அளவு [illegible] கலந்து கொடுத்தால் பசியை அதிகப்படுத்தும். இது தைலமுறைகளில் சேருவது.

108 33 குப்பைமேனி :— (Indian Acalyphe) வேர். இலை மலங்கழிப்பது. (விரேசனகாரி) வேரை அரைத்துக் கொடுத்தால் பேதியாகும். இலைத்தூளில் 30-40 கிரெயின்

4.109 ணையைச் [illegible] நீரில் கலந்து கொடுத்தால் புத்தியை [illegible]

வெளிப்படுத்தும். இலைச்சாற்றுடன் வெண்ணெயைச் சேர்த்[illegible]

த்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க [illegible] குடலில் [illegible]

வெளிப்படும். இலைச்சாற்றில் உப்பு சேர்த்துச் சொறி சிரங்கு

களுக்குப் பூசலாம். இப்படியே [illegible] பூசலாம்

109

34. குன்றிமணி:— குன்றிமணி (Wild Liquorice) (வேர்-இலை) - கபத்தைப் போக்குவது (கபஹரகாரி) இதில் சிவப்பு, கறுப்பு, வெள்ளை என மூன்று இனங்களுண்டு. விதைகள் [illegible]. எகிப்து (E. இஜிப்ட்) தேசத்தில் இதை உணவாய்ச் சாப்பிடுவதுண்டு. வேர் அதிமதுரத்துக்குப் பதிலாய் உபயோகப்படுகின்றது. இலைச்சாற்றில் சர்க்கரை கலந்து கொடுத்தால் இருமல் தணியும். 2 பலம் வேரை ஒரு படி வெந்நீரில் போட்டு ஊறவைத்து வடிகட்டி 2 பலம் கற்கண்டாவது தேனாவது சேர்த்துக் காய்ச்சிப் பாகு செய்து இதில் ஒரு உச்சிக்கரண்டி அளவு அடிக்கடி கொடுத்துக் கொண்டு வந்தால் இருமல் தணியும்.

109

35. குறிஞ்சா:— கொடிக்குறிஞ்சா (Country Ipecacuanha) (வேர்-இலை) வாந்தி மருந்து (வமனகாரி) வேரைக் கஷாயமிட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் வாந்தியாகும். 3-5. கிரெயின் குறிஞ்சா இலைத்தூள், 20 கிரெயின் [illegible] 1/2 கிரெயின் அபின் இவைகளைக் கலந்து மாத்திரை செய்து கொடுத்தால், பேதி. சீதபேதி இவைகள் குணமாகும். நாள்பட்ட இருமலுக்கும் - கக்குவானுக்கும் கொஞ்சமாய்க் கொடுக்கலாம்.

36. கையாந்தகரை :— கரிசலாங்கண்ணி (Eclipta Erecta) (முழுவதும் - சமூலம்) இதைக் குடிநீராக்கிச் சுரம் - மாந்தம் இவைகளுக்குக் கொடுக்கலாம். தைலங்களில் சேருகின்றது.

37. கோஷ்டம் :— [illegible] (Costus Arabicus) (வேர்) இதை குடிநீராக்கி நச்சுக் காய்ச்சல் (தோஷ சுரம்) களுக்குக் கொடுக்கலாம். பசி உண்டாகும். வலிமை வரும்.

38. கோரோசனை ~~[illegible]~~ :— (Biliary Calculus of a Cow or ox) பசு அல்லது எருதின் பித்தப் பையில் உண்டாகும் ஒருவகைக் கல்லு. இஃது எப்பொழுதும் இரு பையில் அடங்கி இருக்கும். 2-3. புளியங்கொட்டை அளவிருக்கும். நிறம். மஞ்சள். பால் வைத்திய சிகிச்சையில் இது மிகவும் உபயோகப்படுகின்றது. 1 கடுகு அளவு வெற்றிலைச் சாற்றிலாவது, முலைப்பாலிலாவது இழைத்துச் சுரம், சுழுப்பு - மாந்தம் - முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு. கோரோசனை மாத்திரை :— கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், அக்கிரகாரம் வகைக்குப் பலம் 1. இவைகளைச் சந்தனக் கட்டையின் குடிநீர்விட்டு மை போல் அரைத்துக் குன்றி போலுண்டை செய்துக் கொள்ள வேண்டியது. இசிவு, சுரம், அப்பாசம், இவைகள் கொடியதாகையால் நீக்கவல்லது. மஞ்சள் பூக் குடிநீர், செம்புக் குடிநீர் [illegible] (வைத்திய ரத்தினச் சுருக்கம்) இவ்விதமாக வைத்தியத்தில் கோரோசனை பயன்படுகின்றது.

39 சாம்பிராணி :— (Benzoin) இதை எண்ணெயில் காய்ச்சிக் காதுவலி - வாத நோய் இவைகளுக்கு உபயோகிக்கலாம். சாம்பிராணிப் புகை தலைவலியும், நீர்க்கோவையும் நீக்கும்

4.III சாம்பிராணி, கஸ்தூரிமஞ்சள், அபினி, சுக்கு, இவைகளை அரைத்து
தலைவலிக்கு நெற்றிமேல் பூசலாம். சாம்பிராணித் தைலம் [illegible]
[illegible], கண்ணைப் பொரிப்பதும் உடலின் எரிப்பு, தலைவலி,
காசநோய், நீர்ப்பீனசம் இவைகள் நீங்குமாம். சாம்பிராணி
III ச் சூரணத்தைச் சர்க்கரையில் கலந்து கொடுக்க நோய் (கபரோகம்) க்குக் கொடுக்கலாம்.

40. சித்திரமூலம்:— கொடிவேலி (Leadwort) (வேர்)
புண் மருந்து (வினைகாரி) ஆறுதருவது (உஷ்ணகாரி) இதில்
இலுப்பு, வெள்ளை, நீலம், என 3 இனங்களுண்டு. பச்சை வேரை
வழக்கத்தில் நீர் விட்டு அரைத்துத் துணியில் துண்டமாய் (துண்ட
மாய்) த் உடலில் 1/2 மணி நேரம் உடம்பு மேல் போட்டுவைத்துப்
பிறகு எடுத்து விட்டால், போட்ட இடம் கொப்பளித்துப் புண்ணாகும்.
அரையாப்புக் கட்டிமேலும், இடுப்புக்கு மார்பின் மேலும்
போடலாம். பல மருந்துப் பட்டி (டாப்பு) களோடு சேர்கின்றது.
இது மிகவும் வெப்பம் செய்கிற பொருளாகையால் நீக்கி வைப்ப
பதே நல்லது. வேரை எண்ணெயில் கலந்து வாத நோய்களுக்குப்
பூசலாம். பெண்கள் கருப்பிண்டத்தைக் கரைக்க இதை அரை
த்துச் சிறு [illegible] [illegible] கொடுத்துக் கொள்கிறார்
கள். இதற்குக் கருப்பையை தூண்டுகிற குணம் இல்லை
இதன் சத்தில் [illegible] அல்லது அதை சுருக்கி
மெல்லிய துணியில் வைத்துப் புண்ணில் பிண்டத்தை வெளிப்
படுத்தி விடுகிறார்கள். இது மிகவும் தீமையான செய்கை.
III
41. சிவதை வேர்:— (Indian Jalap) பேதியாக்கு
வது. (விரேசனகாரி) வேர்ப்பட்டையை அரைத்துப் பாலில்
கலந்து கொடுத்தால் பேதியாகும். 6 அங்குல வேர் ஒரு
வேளைக்குப் போதுமானது. ஜலோதரத்துக்கு [illegible] இதைக்

இதைப் பயன்படுத்தலாம். அதைப்போல் வெட்டுப்பிளவு சிரங்கு உள்ளவையும் சேர்த்துக் கொள்ளலாம்.

42. சிற்றாமுட்டி:— (Pavonia Zeylanica) வேர் (அசுவகாரி) இதைக் குடிநீராக்கிச் சுரங்களுக்குக் கொடுக்கலாம். எல்லா டைப்புகளிலும் சேர்கின்றது.

43. சீமையகத்தி:— வண்டுகொல்லி (Ringworm Shrub) (இலை) இதை எச்சில் படைக்குத் தேய்க்கலாம். இலைச் சாற்றைத் தேங்காய்ப்பாலில் கலந்து சிரங்குக்குப் பூசக்கூடும்.

44. சீயக்காய்:— சிகைக்காய் (Acacia Concinna) (காய், கொழுந்து) காயைக் கொடுத்தால் பேதியும், வாந்தியும் ஆகும். தேக்கிலிருக்கும் மருந்துக்கும் (பேதியைட) உதவும். கொழுந்தைத் துவையல் செய்து சாப்பிட்டால் பித்தம் தணியும். புளிக்குப் பதிலாய் இதைச் சேர்த்துக் கொள்ளலாம்.

45. சுருளிப்பட்டை:— செக்கந்தாரிப்பட்டை - இதைத் தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் புண்களுக்குப் போட்டால் விரைவில் உலரும்.

46. செம்பை:— (Sesbania Aegyptiaca) (இலை) இதில் 2 வகைகளுண்டு. இலையை விளக்கெண்ணெயிலிட்டு வதக்கிக் கட்டிகளுக்குக் கட்டினால் விரைவில் பழுக்கும் வீக்கம் கரையும்.

47. செம்மரம்:— (Redwood) இதைக் குடிநீராக்கிக் குளிர் காய்ச்சலுக்குக் கொடுக்கலாம். மிகுதியானால் மயக்கம் காணும். இதை அரைத்து வீக்கங்களுக்குப் பூசுவதுண்டு.

48. தகரை:— (Cassia Tora) (வேர்-விதை) வேரைப் பசுஞ்சாறு விட்டுக் கரைத்துப் படர் தாமரைக்குப் போடலாம். விதையை அரைத்து மோரில் கலந்து கொடு-

4.112-113

112 சொறி சிரங்கிற்கும் பூசலாம்.

49. தாளிசப்பத்திரி:— (Flacourtia Cataphracta)

(குண) துவர்ப்புப் பொருள் (சங்கோசனகாரி) சடாராக்கினி வர்த்தனகாரி. பேதி - இரத்தபேதி - காசம் - வயிற்றுவலி - சு.நோ இவைகளுக்கு 1/2 விராகனெடை வீதம் கொடுக்கலாம். தொண்டைக் கம்மலுக்கும் கொடுப்பதுண்டு.

தாளிசப்பத்திரிச் சூரணம் செய்முறை:—

தாளிசப்பத்திரி பலம் 10. சுக்கு, மிளகு, திப்பிலி (திரிகடுகு) கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், (திரிபலை) கோஷ்டம், அக்கரகாரம், யானைத்திப்பிலி, சீரகம், கொத்துமல்லி, வாய்விளங்கம் கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சி, கொம்பு வால்மிளகு, இலவங்கப்பட்டை வகைக்குப் பலம் இடித்துச் சூரணித்துச் சன்னமாக சருக்கரை கூட்டிக் கொண்டு (திரிகடிப்பளவு)

*(பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல் மூன்றும் ஒருங்கு சேர்த்து முதல் இறைவரை அள்ளும் அளவு) கொள்ள, சு.நோ, எரும்புக் காய்ச்சல் (அஸ்திசுரம்) நீர் வேட்கை (தாகம்) பித்தமயக்கம் கிரகணி, உளைவு நோய் (அதிசாரம்), பொருமல், விக்கல்

113 ஈளை இவை முதலானவைகள் தீரும் (வைத்திய சாரசங்கிரகம்)

50. தான்றிக்காய்:— (Terminalia Bellerica)

இதற்குத் துவர்ப்புக் குணமுண்டு. பேதிப்புண்ணுக்கு இதைத் தூவிப் போடலாம். அநேக மருந்து முறைகளில் சேருகின்றது.

113

51. திருநீற்றுப்பச்சை:— திருநீற்றுப்பத்திரி உருத்திரசடை, சப்ஜா (Sweet Basil) (குண - விதை) சப்ஜா விதைக்குக் குளிர்ச்சியுண்டு. இதை வெந்நீரில்

48 4-115-114

வெந்நீரில் போட்டு ஊறவைத்து, மேகம் - இருமல் - வயிறு கொட்டல் - பேதியாக (அதிசாரம்) இவைகளுக்குக் கொடுக்கலாம். சாற்றைக் காதில் விட வலி நீங்கும். நீர்வாடு (மேல்நாடு) யில் மணத்துக்காக உணவுப் பொருட்களோடு இதைச் சேர்ப்பதுண்டு.

113

52. துளசி :- (Holy Basil) (வேர் - இலை) வேரைக் குடிநீர் செய்து காய்ச்சலுக்குக் கொடுக்கலாம். இலைச்சாற்றைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் இருமல் குணமாகும். பச்சைக்கற்பூரம் சேர்த்துத் தொண்டை, மண்டை, நெஞ்சு, இவைகளின் மேல் தடவலாம். துளசி விதைக் குடிநீரை இருமலுக்குக் கொடுக்கலாம்.

114

53. தூதுவளை :- (Solanum Trilobatum) முழுவதும் (சமூலம்) இதைக் குடிநீர் செய்து இருமலுக்குக் கொடுக்கப்படும். இலையைக் கறியாகவும் (கீரையாகவும்) துவையலாகவும் செய்துக் கொடுப்பதுண்டு.

114

54. நாயுருவி :- (Achyranthes Aspera) முழுவதும் (சமூலம்) இலையை அரைத்துத் தேள் கொட்டின இடத்தில் தடவினால் குணப்படுமென்று கண்டிருக்கிறது.

114

55. நாய்த் துளசி :- (இலை) இதன் சாற்றைக் கொடுத்தால் இருமல் தணியும். மாந்தம் அறும்.

114

56. நாய்வேளை :- (Polanisia Icosandra) (இலை) இதை அரைத்துக் கட்டினால் தோல் சிவக்கும். நீரை இறக்குமென்பது ஐயம். விதைக்கு காய்ச்சலுக்கென்று பேர். இதைத் துவையல் செய்து நோயாளிக்குக் கொடுக்கலாம்.

114

57. நிலவிளா :- பெருவிளா, கருவிளா - இலையைக் குடிநீர் செய்து பித்த தாகம், ரத்தம், சுரம் - இவைகளுக்குக் கொடுக்கலாம்.

114

58. நீர்முள்ளி :- (Astera Cantha Longifolia) முழுவதும் (சமூலம்) இதைக் குடிநீர் செய்து

49 4.114-115 கொடுத்தால் உஷ்ணத்தை அடக்கும். நீர்க்கோர்வைக்குக் கொடுத்தால் நீர் அதிகமாய் இறங்கும். இதன் காம்பிலைச் சிறுநீரில் கலந்து
114 விக்கத்துக்குக் கொடுத்து நடப்பதில் பயனில்லை.

59. நெல்லி:—(Emblica officinalis)(காய், பழம், விதை) விதையையாவது, வற்றலையாவது குடிநீர் செய்து கொடுத்தால் சூடு தணியும். பித்தமயக்கம் — தாகம் — அடங்கும் ஓக்காளம் நிற்கும். பட்டையைக் குடிநீர் செய்து கொடுத்தால் பேதிக்கட்டும். நெல்லிக்காய் ஊறுகாய் அல்லது துவையல் நோயாளிக்குக் கொடுக்க உதவும். உணவின் ருசியை உண்டாக்கும்.

114 60. நெருஞ்சி:—(Tribulus Lanuginosus)(முழுவதும்) வெள்ளைநோய், நீர்க்கடுப்பு நோய்கள். இதைக் குடிநீர் உண்டாக்கி இறுத்துச் சுருக்கையைத் தீர்க்கும். மேகத்துக்கும் நீர்க்கடுப்புக்கும் கொடுக்கலாம். மாதவிடாய்க் கோளாறுக்கும் கொடுக்கலாம்.

115 61. நொச்சி:—(Gendarussa Vulgaris)(இலை) நொச்சியிலை போட்டுக் காய்ச்சின நீர் ஆவி பிடித்தாலும் குடித்தாலும் வாதநோய், உடம்புவலி இவைகள் நீங்கும். இலையை வதக்கி ஒத்தடம் கொடுக்கலாம். வீக்கத்துக்கும் தலைவலிக்கும் — பிள்ளைப்பேற்றுக்கும் கட்டலாம். நொச்சியிலைச் சாற்றில் கடுகு கலந்து கொடுத்தால் வாதநோய் நீங்கும். நொச்சித்தழையைத் தலையணையாக வைத்தால் தலைநோய் அகலும்.

115 62. பப்பாளிச் செடி:—(Papaw tree) இளம் பிஞ்சில் பால் அதிகம், ஜீரணசக்தி, மாமிசம் இவைகளை 2-3 மணிநேரம் இருக்கச் செய்து கட்டி வைத்துச் சமைத்தால் மிருதுவாகும். பாலைக் கொடுத்தால் வயிற்றுப்பூச்சிகள் பூச்சி வெளிப்படும். காயை மாமிசத்தோடு சேர்த்துச்

4·115–116·

59 தொத்துச் சமைத்தால் மிருதுவாகும். பல் நோவுக்குப் போடுவதுண்டு. கருங் கொள்ளாமணிக்குப் பழுத்தைச் சாப்பிட்டுக்கொண்டு வருவதுண்டு. கருவை அழிக்கச் சாப்பிடுகிறார்கள். ஆதிவ் ஸ்வயம்

63 பற்பாடகம் :—(Mollugo Cerviana) இலைக் குடிநீர் செய்து சுரங்களுக்குக் கொடுத்தால் வியர்வை பெருக்கும்.

64. பிரண்டை :—(Vitis Quadrangularis) இளம் தண்டுகளை வதக்கித் தசைக் கட்டுக்குக் கட்டுவதுண்டு. கொழுந்தை உலர்த்திச் சூர்ணம் செய்து பேதிக்குக் கொடுப்பது வழக்கம். துவையல் செய்து சாப்பிட்டால் மிகுதியாக பசி யெடுக்கும்.

65. பிரமதண்டு :—(yellow Thistle) பாலைக் கண்ணோய்க்கு அக்கிக்கும் சொறிக்கும் போடுவதுண்டு. மேகப்புண்ணுக்கு உதவுகிறார்கள். விதையைக் கொடுத்தால் வாந்தியாகும். உறக்கம் வரும். தைலத்தில் 30 துளி சர்க்கரையில் விட்டுக் கொடுத்தால் வயிற்று வலியை உடனே நிறுத்தும் - உறக்கமுண்டாகும். வாய் நோயிலும் உண்டு.

66 புங்கன் :—(Pongamia Glabra) (வேர்) சாற்றைப் புரைகள் விழுந்த புண்களுக்குப் பூசுவர். விதையின் உள்ளே புங்கன் நெய் கரப்பான், சொறி — சிரங்கு இவைகளுக்கும்.

67 பூவரசன் :—(Portia tree) காயின் சாற்றை தேமல் படர்தாமரைக்குப் பூசலாம். பட்டை மேகநோய்களுக்கும் தோல் நோய்களுக்கும் உதவுகின்றது.

68 பேய்ப்புடல் :—(Trichosanthes Cucumerina) இலைக் குடிநீர் செய்து சுரம் - பித்தம் - இவைகளுக்குக் கொடுப்பதுண்டு. இலைச் சாறு வாந்தியாகும். வேர்ச்சாறு பேதியாகும்.

69 பொடுதலை :— பொற்றலைக் கையாந்தகரை (Zapania-nodi flora) வேரையும் (இலையும்) இலைக் குடிநீர் செய்து குழந்தைகளுக்குக் காணும் மாந்தம் - பேதி இவைகளுக்குக் கொடுக்கலாம்.

116-117
70. மணத்தக்காளி:—(Solanum Nigrum) இதில் கைப்பு-துவர்ப்பு-என இரு சுவைகளுண்டு. இலைச்சாற்று
சர்க்கரையைச் சேர்த்து நாக்கு வெடிப்புநோய் (அக்கரம்)
கப்பான் இவைகளுக்குக் கொடுக்கலாம். குடிநீர் செய்து
வாய்ப்புண்ணுக்குக் கொப்பளிக்கலாம். இலைநீர் செய்து வாய்ப்
புண்ணுக்குக் கொப்பளிக்கலாம். வற்றல் குடிநீராக்கிக் கொடுத்தால்
நீர் அதிகப்படுத்தும் - மணத்தக்காளித் தீநீருக்கும் அதுவே
குணம். நீர்க் கோர்வைக்கு உதவும்.

116
71. மாமஞ்சள்:—(இருவகை) இது முதல் குறைகளில் சொல்லியது.

116
72. மாங்காய்:—(Mango) மாங்கொட்டைப் பருப்பை
அரைத்து - சீதக்கடுப்பு - இரத்தபேதி - இவைகளுக்குக்
கொடுக்கலாம். வேர்ப்பட்டையைக் குடிநீர் செய்துக் கொடுத்
தால் சீதபேதி குணமாகும்.

113
73. மிளகரணை:—(Scopolia Acubata) வேர்-பட்டை
இலை - கர்ப்பவாத சூதகாசி - பலகாசி. இவைக் குடிநீர் செய்து
117 செரியாமை - வாய்வு - கொனைநோய் - இவைகளுக்குக் கொடுக்கலாம்.

74. மாட்டுமொக்கு:— இதைச் சாப்பிட்டால் - மயக்
கம் கொடுக்கும். களிமா (சேகரம்) வாது பாலில் காய்ச்சியா
வது பேதிக்கட்டவும், — வேறு நோய்களைத் தணிக்கவும் கொடுப்ப
துண்டு. ஒரு மொக்கு ஒரு வேளைக்குக் கொடுக்கலாம்
இதை உன்னிப்பாய்க் கையாள வேண்டும்.

117
75 முக்காவேளை:—(Prickly galega) (வேர்)
இதைச் சுக்குடன் குடிநீர் செய்து கலந்துக் கொடுக்கலாம்

117
76 முசுமுசுக்கை:—(Rough Bryony) (வேர், இலை)
இலைச்சாற்றில் கொச்சிக்காயை சேர்த்து கோழைநோய்

77. முடக்கொற்றான்:— (Cardiospermum halicacabum)
(இலை-வேர்) வேளைக்குடிநீர் செய்து கொடுத்தால் மலம் கழியும்
இலையைக் கீரையாக நோய்களுக்குக் கொடுக்கலாம். தைலம் செய்து
தெளிக்கலாம் - கீல்கட்டு இவைகளுக்குப் பயன்படுத்துவதுண்டு

78 முருங்கை:— (Horse Radish) (வேர்-பட்டை) இதைச்
சுரத்தைப் பக்கவாதம் - விஷசுரம் - காக்கைவலி - இருமல்
சன்னி இவைகளுக்குக் கொடுக்கலாம். ~~தைலம் செய்து தெளி-~~
~~க்கலாம்~~ அரைத்து மேலுக்குப் போட்டால் நோய் நீங்கும்.
முருங்கைப் பூவைப் பாலில் காய்ச்சி வீரியத் தெறிப்புக் (இந்திரிய
-புஷ்டிக்)குக் கொடுப்பதுண்டு

79 மூக்கிரட்டை:— (Spreading Hog-weed) (வேர்)
இதைத் தூள் செய்தாவது குடிநீர் வைத்தாவது மலம் கழியவும்
மூத்திரம் வெளிப்படவும் கொடுப்பதுண்டு

80. வல்லாரை:— (Asiatic Hydrocotyle) (சமூலம்)
பலகாரி, சடராக்கினி வர்த்தனகாரி, மேதா வர்த்தனகாரி.
இதைப் புண் ஆறாத நோய்களுக்குக் கொடுத்தால் மிகுந்த நன்
மைத் தரும் - குஷ்டம் - புண் - மேகம் - கண்டமாலை இவை
முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். நன்றாகக் கிள்ளிப் போட்டு
நிழலில் உலர்த்தி தூளாய் தூள் செய்துக் கொள்ள வேண்டியது.
இதை வெயிலில் உலர்த்தினால் நிறம் மாறும். தீப்பட்டால் குணம்
போய்விடும். இந்தப் பொடியை 5-8-கிரேயின் எடைத்தூளை
ஜலத்தில் கலந்து நாளொன்றுக்கு 2 முறை கொடுக்கலாம்
2 அவுன்ஸ் தூளை 2 பைண்ட் வெந்நீரில் போட்டு ஊறவைத்
துக் குடிநீர் ஆக்கிக் கொள்ளலாம். 3 பவுண்டு வல்லாரைப்
பொடியை 8 காலன் நீரில்இட்டு ஊறவைத்து குடிநீர் செய்ய

4-118-119 

செய்யலாம். வல்லாரைக் குடிநீருடன் அயச்செந்தூரம்
சேர்த்து - இரத்தத்துக்குக் கொடுக்கலாம். வல்லாரை இலையைக்
துவையல் செய்துண்டால் தேகம் மெலிந்து ...
சுரம் - தலைச்சுற்றும் - கிறுக்காணும் : நடுக்கங்கள் காணும்
உண்டு. இதனை புண்கள் மேல் தூவினால் விரைவில் உலரும்.

118
81. வாய்விளங்கம் :— (விதை) இதை அரைத்துத் தேன்
கொட்டுவாய்க்குப் பூசலாமென்று கண்டிருக்கிறது.

118
82. விளாமிச்சைவேர் :— இதைக் குடிநீரிட்டு - மயக்கம்
பித்தம் - நீர் வேட்கை (தாகம்) இவைகளுக்குக் கொடுக்கலாம்

118
83. விடுதியிலை :— விஷசுரகாரி. வேதியாகும் விஷ
வேதிக்குக் கருப்பையிலிருந்து கசிவு நீக்கச் செய்துக் கொ
உண்டாமென்று கண்டிருக்கிறது.

118
84 விளாம்பிசின் :— (Wood apple gum) (பிசின்மரமும்)
பிசின் / விளாங்காயை நீரில் கரைத்து - நீர்ச்சுருக்கு
இருமல் - பேதி - இவைகளுக்குக் கொடுக்கலாம்.

118
85 விஷ்ணுகிராந்தி :— (Convolvulus Alsinoides)
(சுரம்) இதைக் குடிநீர்ச் செய்து - சுரம் - பித்தத்துக்குக் கொடுக்கலாம்.

118
86 வெட்டிவேர் :— (Cuscus Grass) உஷ்ணகாரி
சுவேதகாரி இதைக் குடிநீராக்கி - சுரம் - வாதநோய்
இவைகளுக்குக் கொடுக்கலாம். நீர் வேட்கை நீக்கும் (தாகம்)
அடக்கும். பாலில் அரைத்து தலைச்சுற்றுக்குப் பூசலாம்.

119
87 வெண்டை :— (Abelmoschus Esculentus).
இலையை வேண்டியவை செய்து பயன்படுத்தலாம். விதையை
பாலில் அரைத்துக் கொடுக்கக் காய்ச்சிக் கொடுத்தால்
இருமல் தணியும் - நீர்ச்சுருக்கு அடக்கும். பேதிக்குக்
கொடுக்கலாம்.

88 வெந்தயம் :- (விதை) (Fenugreek) குளிர்ச்சிகாரி
இதை ஊறவைத்து அரைத்துக் கொடுத்தால் வயிற்றுளைச்சல்
நீங்கும். பிள்ளைகளுக்கு - கணைக்காய்ச்சல் போகும். உடம்பு
குளிர்ச்சியாகும். இரும்புக்கும் நல்லது - பருக்களுக்கு
கட்டுதலாகவும் [illegible] - விதையின் பருப்பும் - நீரில்
காய்ச்சி வடிக்க [illegible] நீரில் இற்றும் கொடுக்கலாம்

89 வேம்பு :- (Neem Tree) (பட்டை - இலை - எண்ணெய்
கொழுந்து - பூ - விதை) பலகாரி பட்டைத்தூளை 1 வீசமாக
முறை விடும் குளிர்க்காய்ச்சல் விட்டுவிட்டு வருகிறபோது
நாளொன்றுக்கு 3-4 - முறை கொடுக்கலாம். 1. பலம் பட்டையை
உடைத்துப் போட்டு 1/4 படியாக வற்றக்காய்ச்சி இதில் 1/4 அவு-
க்கு நாளொன்றுக்கு 3 தடவை சோகை, நெடுநாள் ஜுரங்களுக்கும்
பசியில்லாதவர்களுக்கும் கொடுக்கலாம். இதோடு (லவங்கப்
சேர்த்தால் இன்னும் அதிகப்படும் பக்குவத்துக்கு ஏற்றபடி
இதைப் பயன்படுத்தலாம். வேப்பிலையை அரிசிமாவுடன்
சேர்த்து போல்டீஸ் செய்துக் கட்டப் புண்கள் விரைவில்
ஆறும். இலையை அரைத்துச் சொறி சிரங்கு - அம்மைப் புண்
இவைகளுக்குப் பயன்படுத்தலாம். வேப்பங்கொழுந்து, ஓமம்
சுக்கு, வசம்பு - பூண்டு இவைகளை அரைத்துக் கொடுத்தால் வயிறு
விம்மல் நீங்கும். வேப்பம்பூ துவையல் பித்தத்தை அடக்கும்
வேப்பெண்ணெய் புண்களை ஆற்றும். வேப்பம் பிசினுக்கு காய்ச்
சல் போக்கும் குணம் இருக்கின்றது. வேப்பங் கொழுந்து பசியை அதிகப்
படுத்தும்.

120.
90 வேலிப்பருத்தி :- உத்தாமணி (Daemia Extensa)
(இலை) இதைக் கஷாயம் செய்து (கடுக்காயுடன்) சேர்த்து [illegible]
களுக்குக் கொடுப்பதுண்டு, [illegible] [illegible] - வாந்தியாகும்

[illegible] உடன் சேர்ந்து வரக் [illegible]

இந்நூலில் மருந்துணவுக்கான பொருள்கள் [illegible]க் கொடுக்கப் பயனுள்ள சில துவையல்கள் — கஞ்சிகள் இவை [illegible] யவைகள் கூறப்படும்.

120 — : மருந்துணவுக்காகும் பொருள்கள் :—

அத்திப் பிஞ்சு — ஆடாதொடைக்காய் (ஆதண்டை), அறுகீரை, ஆரைக்கீரை — எலுமிச்சம்பழம் — கத்தரிப் பிஞ்சு — [illegible] — கோவைக்காய் — சிறுபயறு — சிறுகீரை — தூதுவளை — [illegible] — வசலை — பழம்புளி — பீர்க்கம் பிஞ்சு — புடோலம் பிஞ்சு — புதிய நெய் — பெருங்காயம் — பேயன்வாழைப்பழம் — பொன்னாங்காணி — மணத்தக்காளி — மாங்காய்ப் பருப்பு — மாங்காய்ப் பிஞ்சு — வெள்ளுள்ளி — முருங்கைப் பிஞ்சு — முள்ளி — வாழைப்பிஞ்சு — வாழைப்பூ — வெண்டைப் பிஞ்சு — வேளை இவைகளும் [illegible] — பாகற்காய் இவைகளும் மருந்துணவுக்கேற்றவை. ஆனால் நமது மக்கள் இவைகளைச் [illegible]

120
1. இறைச்சி வகையில் :— உடும்பு — உள்ளான் — ஊர்க்கோழி — கவுதாரி — காடை — கோழிக்குஞ்சு — மான் — முயல் — வெள்ளாடு.

120
2. கருவாடு வகையில் :— கத்தைக் கருவாடு — காரைப் [illegible] — [illegible] — கிழங்கான் — [illegible] — [illegible] — [illegible] — இருக்கை — வரால் — வெள்ளரி — நெத்திலி — சுதும்பு.

120
3 ஊறுகாய் வகையில் :— இஞ்சி — கடுக்காய் — எலுமிச்சங்காய் — களாக்காய் — நாரத்தங்காய் — புளிமாங்காய் (கிளிமாங்காய்) — நெல்லிக்காய் — மாம்பிஞ்சு.

120
4 பழ வகையில் :— [illegible] — [illegible] — [illegible] மாதுளம் — பேயன் வாழை

121
5. சுண்டாங்கி அல்லது துவையல்களில் :— பிரண்டை [illegible] — பச்சைக் கொத்துமல்லி — [illegible] புளியாரை — வேப்பம்பூ — புதினா — [illegible] — துவரம் பருப்பு — பச்சைப் பயறு.

121
6 கஞ்சி வகையில் :— அரிசி — நொய்க்கஞ்சி; பொட்டுக்கடலைக்கஞ்சி, சிறுபயற்று [illegible] உலர்ப்பாக்கிய அரிசிக்கஞ்சி, (புனர்ப்பாகம்), [illegible] கஞ்சி, கொள்ளுக்கஞ்சி — பால்கஞ்சி — நெற்பொரிக்கஞ்சி — ஆரோட் கஞ்சி — [illegible] கஞ்சி — [illegible] கஞ்சி — பாயாசம்.

58 பக்கம் பார் தொடர்ச்சி
இதன் தொடர்ச்சி [illegible] 58 பக்கம் பார்

[illegible] 58 பக்கம் பார்.
4-122-123

# சூரணங்கள் (தூள்கள்)

1. வால்மிளகுத் தூள்:— வால்மிளகுத் தூள் பலம் 2 ஏலக்காய்த் தூள், கொத்தமல்லித் தூள் - கற்கண்டுப் பொடி வகைக்குப் பலம் 1 - சேர்த்து 1. வராகனெடை வீதம் நாளொன்றுக்கு 2-3 - தடவை கொடுக்கவும். வெள்ளை விழுதல் நிற்கும்.

2. மாதுளம் பழத்தோல் தூள்:— மாதுளம் பழத்தோல் உப்புப் போட்ட மாங்கொட்டை, நெல்லிமுள்ளிக்காய் - கறிவேப்பிலை - உப்பு போட்ட சுண்டைக்காய் வற்றல் - வெந்தயம் இவைகளை வெவ்வேறாய்த் தூள் செய்து நோயாளிக்குத் தக்கபடி அம்மருந்துகளைச் சேர்த்து நீர் வடிய வைத்த தயிரில் கலந்து நாளொன்றுக்கு 3-4. தடவை கொடுக்கவும். அதிசாரம் - சீதபேதி இவைகள் நிற்கும்.

3 அமுதாதித் தூள்:— தூள் செய்த சுக்கு, மிளகு, திப்பிலி இலவங்கப்பட்டை, ஏலரிசி, இலவங்கம் - சித்தரத்தை - அதிமதுரம் அதிவிடயம் - அக்கராகாரம் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துத் தேன் விட்டுக் கலந்து கொஞ்சம் நாக்கிலடக்கிக் கொண்டிருந்தால் நாக்கில் நீர் ஊறும். இத்தோடு பேதி மருந்துகளைச் சேர்த்துக் கொடுத்தால் மலம் வெளியாகும். வெங்காரம் சேர்த்தால் சிறுநீர் இறங்கும். இலங்கப்பூ - கஸ்தூரி, கற்பூரம் - ஜாதிபத்ரம் இவைகளையும் சேர்த்துக் கொடுக்கலாம். மயக்கத்துக்கு அட்டகாம்பல் மான்கொம்பு - உருத்திராக்ஷம் - பவழம் - பொன் - வெள்ளி இவைகளையும் சேர்த்துக் கொடுப்பது வழக்கம். ஆதில் பயனில்லை. இதைத் தண்டா மருந்து என்று சொல்லுவார்கள்.

4. கோழைநோய்த் தூள்:— (கபரோகச் சூரணம்)
தூள் செய்த சாதிக்காய் பலம் 1/8, அதிமதுரம் - வால்மிளகு - மாசிக்காய் - பேரரத்தை (தும்பராஷ்டகம்), இலவங்கப்பட்டை - திப்பிலி சுக்கு - இலவங்கம் - ஏலவரிசி வகைக்குப் பலம் 1/4. கஸ்தூரி வராகனெடை 1. சேர்த்து இதில் 1. வராகனெடை வீதம் நாளொன்றுக்கு 3-4. தடவை கற்பூரவெற்றிலை (கம்மாறுவெற்றிலை)ச் சாற்றிலாவது தேனிலாவது கொடுக்கவும். இருமல் நோய்கள் நீங்கும்.

5 பலகாரித் தூள்:— அயச்செந்தூரம் - காம்பாவேர்ச் சூரணம் - சுக்குத் தூள் வகைக்கு - 1/8 - வராகனெடை காட்டு மஞ்சள் கிழங்கு (செவ்வள்ளிக் [illegible]) தூள் 1/16 - வீதம் (மாசாணி)

4.123-124.

விராகனிடை சேர்த்து நாளொன்றுக்கு 3-4-தடவை ~~தவறாமல்~~ ~~தின~~ முறை கொடுக்கவும். உடம்பில் இரத்தம் ஊறிப் பலம் வரும். பாண்டு நோயைக் குறைப்படுத்தும்.

123
6 இங்குவாதித் தூள்:— தூள் செய்த மிளகு - திப்பிலி - சீரகம் இந்துப்பு வகைக்குப் பலம் 1. பெருங்காயப்பொடி பலம் - 1/8. கறிவேப்பிலைத்தூள் பலம் 2 சேர்த்து 1. விராகனெடை வீதம் சோற்றுடன் சேர்த்து நெய்விட்டுக் கலந்து சாப்பிட்டுக் கொண்டு வந்தால் மாந்தம் - செரியாமை - வயிற்றுக் கடுப்பு - முதலியவைகள் நீங்கும் மலம் வெளியாகும்.

123
7 நாகராதித் தூள்:— தூள் செய்த சுக்கு - சீரகம் - மிளகு திப்பிலி - இலவங்கம் வகைக்குப் பலம் 2 சேர்த்து 1. விராகனெடை வீதம் நெய் - சர்க்கரை இவைகளில் ஏதாவதொன்று கலந்து சாப்பிடவும். செரியாமை நோய் (அக்கினி மந்தரோகம்) நீங்கிவிடும்.

பக்கம் 124

## —: தைலங்கள் :—

124
1. வில்வாதித் தைலம்:— பத்து(10) பலம் வில்வவேர்ப் பட்டையை இடித்து 2 மரக்கால் நீரில் போட்டு 1/4 மரக்காலாயச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இதில் 1. படி நல்லெண்ணெய் - 4 பலம் சந்தனத்தூள், அரைத்த தேங்காய் - கஸ்தூரி மஞ்சள் - ஏலம் - வகைக்குப் பலம் 1. சேர்த்து, பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இதைத் தலை முழுகி வந்தால் தாகசுரம் - மேகம் - கண் புகைச்சல் - இருமல் - இரத்தக்குலம் - உட்சுலம் - வறட்சி - இவைகள் நீங்கிவிடும் (இது சூக்ஷும முறை) (வைத்திய சாரசங்கிரகம்)

124
2. சந்தனாதித் தைலம்:— நல்லெண்ணெய், ஊற்றுநீர் - பசும்பால் வகைக்குப்படி 4 சேர்த்துக் காய்ச்சி இதில் சந்தனத்தூள் தேவதாரம் - பேரீச்சன் - திராக்ஷைப்பழம் - தவாக்ஷீரி, தாமரைப்பூ ஏலம் - இலவங்கப்பத்திரி - கொத்தமல்லி - வெள்ளிலோத்தி - நன்னாரி - அதிமதுரம் - வெட்டிவேர் - கோரைக்கிழங்கு வகைக்குப் பலம் 8. இடித்துச் சேர்த்துத் தைலப் பதத்துக்குக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இதைத் தலைமுழுகி வந்தால் தலைநோய்கள் - கண்நோய்கள் வாத நோய்கள் முதலியவைகள் நீங்கிவிடும். (இது சூக்ஷும முறை) மூலிகை சங்கிரகம்.

124
3. அரக்குச் சந்தனாதித் தைலம்:—

590 பக்கம் பார்க்க

லாக்ஷாதி தைலம் - கொம்பரக்குத் தைலம்:— 1. வீசைக் கொம்பரக்கைப் பொடி செய்து 8 படி ஊற்று நீரில் சேர்த்து 1. படியாக

58 4-121-122.

7 **சிற்றுண்டி வகையில்:—** சுக்கு மிளகு - காயம் - இஞ்சி கறிவேப்பிலை இவைகள் சேர்ந்த தோசை - இட்டலி - கொழுக்கட்டை அடை - அவல் - நெய்ப்பொரி.

121 8 **குழம்பு வகையில்:—** மிளகு - சுக்கு - கொத்தமல்லி - வெள்ளைப்பூண்டு - சீரகம் - இவைகளின் குழம்பு வாயுவைக் கண்டிக்கும் பெருங்காயம் - உணவுப் பொருள்களில் மிகுமாய்ச் சேர்த்துக்கொள்ளலாம்.

**மலச்சிக்கலை** நீக்குகிற பொருள்கள் கீரை இனங்கள் - கத்தரிக் காய் - நிலவாரை - [illegible]த் துவையல் - சரக்கொன்றைத் துவையல் மயிர்க்கொன்றை (வாத நாராயணை) இலை - மிளகுநீர் - வாழைப்பழம் - அத்திப் பழம்

121 9 **மலத்தை இறுகச் செய்யும் பொருள்கள்:—** வாழைக்கச்சல் - வாழைப்பூ - அத்திப்பிஞ்சு - மாங்கொட்டைப் பருப்பு வெந்தயம்.

121 ## குடிநீர் வகைகள்:—

1. **நீர்பேதிக் குடிநீர்:—** 1/2 படி வெந்நீரில் - பசலை - கீழாநெல்லி - அருகம்வேர் - அத்தியிலை - வெள்ளரிவிதை வகைக்கு பலம் 3 போட்டு - 2-3-மணி நேரம் ஊற வைத்து வடிகட்டிக் கொள்ளவும். 4 பாலாடை அளவுக்கு 5 குன்றிமணியளவு பொரித்த வெங்காரம் சேர்த்து 3-4-மணிக்கொருமுறை உட்கொண்டு வந்தால் நீர் அதிகமாய் இறங்கும்.

122 2. **சுவப்புக் குடிநீர்:—** 1/4 படி வெந்நீரில் சுக்கு - சன்னா-லவங்கம் - அதிமதுரம் - வகை 1-க்குப் பலம் 1 - சேர்த்து 3-மணி நேரம் ஊற வைத்து வடிகட்டிக் கொள்ளவும் 2 பாலாடை வீதம் நாள் ஒன்றுக்கு 3-4-தடவை கொடுக்கவும்.

